Tamil | தமிழ்

# உண்மையான உதவி.
# உடனடியாக இப்போதே.



# 100 டாலர்கள் மின் சேமிப்பு ஊக்குவிப்புத் தொகை சமூக வெளிக்களத் திட்டம் (Community Outreach Program)

சலுகை அட்டை வைத்திருப்பவர்கள் 100 டாலர்கள் மின் சேமிப்பு ஊக்குவிப்புத் தொகைக்கு விண்ணப்பிக்க, எங்கள் சமூக வெளிநடவடிக்கைத் திட்டத்தின் (Community Outreach Program) தொலைபேசி வழியாகவும், நேரிலும் ஆதரவு பெறலாம்.

## 100 டாலர்கள் மின் சேமிப்பு ஊக்குவிப்புத் தொகை

மின் சேமிப்பு ஊக்குவிப்புத் தொகை என்பது தேவைப்படும் விக்டோரியவாசிகளின் வாழ்வாதாரச் செலவினங்களைச் சரி செய்வதற்கும், எரிசக்திக் கட்டணங்களைக் குறைப்பதற்கும் உண்மையான உதவியை வழங்கும் 100 டாலர்கள் தொகையாகும். தகுதியுள்ள சலுகை அட்டையைக் கொண்ட விக்டோரியக் குடும்பங்கள், விக்டோரிய எரிசக்தி ஒப்பீடு (Victorian Energy Compare) இணையதளமான - compare.energy.vic.gov.au -க்குச் சென்று, இணையவழியாக விண்ணப்பிக்கலாம் அல்லது சமூக வெளிநடவடிக்கைத் திட்டத்தின் (Community Outreach Program) மூலம் விண்ணப்பிக்கலாம்.

## சமூக வெளிக்களத் திட்டம் (Community Outreach Program)

100 டாலர்கள் தொகைக்கு விண்ணப்பிக்க உதவி தேவைப்படுகின்ற சலுகை அட்டைதாரர்கள், சமூக வெளிநடவடிக்கைத் திட்டத்தின் (Community Outreach Program) மூலம் தொலைபேசி வழியாகவோ அல்லது நேரிலோ ஆதரவைப் பெறலாம்.

தகுதியுள்ள குடும்பங்கள் 1800 000 832 என்ற எண்ணை அழைத்துத் தொலைபேசி வழியாகத் தங்களுடைய 100 டாலர்கள் மின் சேமிப்பு ஊக்குவிப்புத் தொகைக்கு விண்ணப்பிக்கலாம் அல்லது அவர்களுடைய பகுதியில் பங்கேற்கும் சமூக வெளிநடவடிக்கைப் பங்குதாரருடன் (Community Outreach partner) இணைக்கப்படலாம்.

## தகுதிக்கான தேவைகள்

தகுதி பெறுவதற்குக் குடும்பத்தினர் செய்ய வேண்டியவை:

- சமீபத்திய குடியிருப்பு மின்சாரக் கட்டணச்சீட்டு வைத்திருக்க வேண்டும்
- பின்வரும் சலுகை அட்டைகளில் ஒன்றை வைத்திருக்க வேண்டும்:
  - சுகாதாரப் பராமரிப்பு (Health Care) அட்டை
  - ஓய்வூதியதாரர் சலுகை அட்டை
  - முன்னாள் இராணுவத்தினர் விவகாரங்கள் (Veteran's Affairs) ஓய்வூதியச் சலுகை அட்டை
  - முன்னாள் இராணுவத்தினர் விவகாரங்கள் தங்க அட்டை

ஒரு குடும்பத்துக்கு ஒரு பண வழங்கீடு மட்டுமே கிடைக்கும்.



**100 டாலர்கள் மின் சேமிப்பு ஊக்குவிப்புத் தொகைக்கு விண்ணப்பிக்க,** **compare.energy.vic.gov.au** என்ற இணையதளத்துக்குச் செல்லவும், அல்லது சமூக வெளிநடவடிக்கைத் திட்டத்தின் (Community Outreach Program) மூலம் தொலைபேசி வழியாகவோ அல்லது நேரிலோ விண்ணப்பிக்கவும்.

VICTORIAN ENERGY COMPARE

VICTORIA State Government

# **உண்மையான உதவி**. உடனடியாக இப்போதே.

## இது எவ்வாறு வேலை செய்கிறது

1. 100 டாலர்கள் மின் சேமிப்பு ஊக்குவிப்புத் தொகைக்கு நீங்கள் தகுதியுடையவரா என்பதைச் சரிபார்க்கவும்.
2. பின்வரும் ஆவணங்களைத் தயார் செய்யவும்:
   - சமீபத்திய மின்சாரக் கட்டணச்சீட்டின் நகல்
   - தகுதிவாய்ந்த சலுகை அட்டை
   - உங்கள் ஓட்டுநர் உரிமம் அல்லது மருத்துவக் காப்பீட்டு அட்டை (Medicare card)*

   உங்கள் அடையாளத்தையும் தகுதியையும் உறுதிப்படுத்த, நீங்கள் இந்த ஆவணங்களிலிருந்து தகவல்களை வழங்க வேண்டும்.
3. தொலைபேசி மூலமாகவோ அல்லது நேரிலோ விண்ணப்பிக்க, இந்தப் பக்கத்தில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களில் ஒன்றைத் தொடர்பு கொள்ளவும்.
4. உங்கள் விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டால், நாங்கள் உங்களுக்கு 100 டாலர்கள் அனுப்புவோம்.

### தகுதியுடைய சலுகை அட்டைகள்




*குடிவரவு அட்டை (Immicard) மற்றும் ஆஸ்திரேலிய விசாவும் ஏற்றுக்கொள்ளப்படும்

## உங்கள் 100 டாலர்கள் தொகைக்கு விண்ணப்பிக்க உதவி தேவையா?

### தொலைபேசி ஆதரவு

**விக்டோரிய எரிசக்தி ஒப்பீடு (Victorian Energy Compare) உதவி இணைப்பு - 1800 000 832**

விக்டோரிய எரிசக்தி ஒப்பீடு (Victorian Energy Compare) உதவி இணைப்பானது, விக்டோரிய வணிகங்கள் மற்றும் குடும்பங்கள் விக்டோரிய எரிசக்தி ஒப்பீடு இணையதளத்தைப் பயன்படுத்தி மிகச்சிறந்த எரிசக்தி ஒப்பந்தத்தைக் கண்டறிய உதவுகிறது. தகுதிவாய்ந்த குடும்பங்கள் தொலைபேசியில் விண்ணப்பிக்க, நேரடி உதவி உட்பட 100 டாலர்கள் மின் சேமிப்பு ஊக்குவிப்புத் தொகை பற்றிய தகவல்களையும் ஆலோசனைகளையும் உதவி இணைப்பு வழங்குகிறது.

### நேரடியான ஆதரவு

**அக்கம்பக்கத்துக் குடியிருப்புகள் விக்டோரியா (Neighbourhood Houses Victoria) - 1800 000 832** என்ற எண்ணை அழைப்பதன் மூலமோ அல்லது compare.energy.vic.gov.au/psb-outreach என்ற இணையதளத்துக்குச் செல்வதன் மூலமோ
உங்களுக்கு அருகிலுள்ள ஒரு பங்கேற்கும் மையத்தைக் கண்டறியவும்.

அக்கம்பக்கத்துக் குடியிருப்புகள் என்பது அனைத்து வயது, திறன்கள் மற்றும் பின்னணிகளைச் சேர்ந்த மக்களுக்கான பல்வேறு சமூக, கல்வி, பொழுதுபோக்கு மற்றும் ஆதரவு நடவடிக்கைகளை வழங்கும் அர்ப்பணிப்புள்ள தன்னார்வலர்களால் பணியாற்றப்படும் உள்ளூர் சமூக அடிப்படையிலான அமைப்புகளாகும்.

## உங்கள் எரிசக்திக் கட்டணங்களைச் செலுத்துவதில் சிக்கல் உள்ளதா?

எரிசக்தி உதவித் திட்டம் (Energy Assistance Program) என்பது 'ஆங்கிலிகேர்' விக்டோரியாவுடன் (Anglicare Victoria) இணைந்து வழங்கப்படும் இலவசத் தொலைபேசிச் சேவையாகும், இது எரிசக்திக் கட்டணங்களில் பணத்தைச் சேமிக்க உதவும். இந்தத் திட்டம் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் அல்லது எரிசக்திக் கட்டணங்களைச் செலுத்துவதில் சிக்கல் உள்ளவர்களுக்குக் கிடைக்கிறது.

இந்தத் திட்டம் பின்வருவனவற்றில் ஒருவருக்கு ஒருவர் என்னும் வகையில் உதவியை வழங்க முடியும்:

- தகுதியான சலுகைகள் மற்றும் மானியங்களுக்கு விண்ணப்பித்தல்
- உங்கள் சில்லறை வியாபாரத்தின் பற்றாக்குறைத் திட்டங்களை அணுகுதல்
- சிறந்த எரிசக்தி சலுகைகளைக் கண்டறிந்து, ஒப்பிட்டுப் பார்த்துப் பின்னர் அதற்கு மாறுதல்
- எரிசக்திக் கட்டணங்களைப் புரிந்துகொண்டு, கட்டணப் பிழைகளை நிவர்த்தி செய்தல்
- வீட்டில் எரிசக்தியைச் சேமித்தல்
- நிதி ஆலோசனை போன்ற சேவைகளைப் பெறுதல்.



உங்கள் எரிசக்திக் கட்டணங்கள் குறித்து உதவியினைப் பெற, **1800 161 215** என்ற எண்ணை திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9:00 மணி முதல் மாலை 5 மணி வரை (பொது விடுமுறை நாட்கள் தவிர்த்து) அழைக்கவும்.

© விக்டோரிய மாநில எரிசக்தி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை நடவடிக்கைத் துறை ஆகஸ்ட் 2025

**ISBN** 978-1-76176-530-8 **(Print)**
**ISBN** 978-1-76176-531-5 **(pdf/online/MS word)**

ஆங்கிலம் அல்லாத பிற மொழிகளில் உதவிக்கு, 131 450 என்ற எண்ணில் மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்புச் சேவைகளைத் (Translating and Interpreting Services) (TIS) தொடர்பு கொள்ளவும்.

**பொறுப்புத் துறப்பு**

இந்த வெளியீடு உங்களுக்கு உதவியாக இருக்கக்கூடும், ஆனால் விக்டோரிய மாநிலமும் அதன் ஊழியர்களும் இந்த வெளியீடு எந்த வகையான குறைபாடுகளும் இல்லாமல் இருப்பதாகவோ அல்லது உங்கள் குறிப்பிட்ட நோக்கங்களுக்கு முற்றிலும் பொருத்தமானதாக இருக்கும் என்றோ உத்தரவாதம் அளிக்கவில்லை, எனவே இந்த வெளியீட்டில் உள்ள எந்தவொரு தகவலையும் நீங்கள் நம்பியிருப்பதால் ஏற்படக்கூடிய எந்தவொரு தவறு, இழப்பு அல்லது பிற விளைவுகளுக்குமான அனைத்துப் பொறுப்பையும் மறுக்கிறது.

VICTORIA State Government

2052